T THOOTHUKUDI

Reg. No.:

# முதல் திருப்புதல் பொதுத் தேர்வு - 2024

## வகுப்பு - 12

காலம் : 3.00 மணி **பொதுத்தமிழ்** மதிப்பெண்கள்:90

பகுதி - I

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 14 x 1 = 14

1. 'காவினெம் கலனே; சுருக்கினெம் கலப்பை' - இத்தொடரில் 'கலன்' உணர்த்தும் பொருள்
அ) வேளாண்கருவி ஆ) போர்க்கருவி இ) தச்சுக்கருவி ஈ) இசைக்கருவி
2. 'எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே - ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே' - என்னும் பாரதியின் பாடல் வெளிப்படுத்துவது
அ) விரிந்த குடும்ப முறை ஆ) தாய்வழிச் சமூக முறை
இ) தனிக்குடும்ப முறை ஈ) தந்தை வழிச் சமூக முறை
3. 'வையகமும் வானகமும் ஆற்றலரிது' - எதற்கு?
அ) செய்ந்நன்றி ஆ) செய்யாமல் செய்த உதவி
இ) தினைத்துணை நன்றி ஈ) பயன் தூக்கார் செய்த உதவி
4. 'புதுப்பெயர்' என்பதன் இலக்கணக் குறிப்பு
அ) தொழிற்பெயர் ஆ) வினைத்தொகை இ) பண்புத்தொகை ஈ) உருவகம்
5. 'உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்' - இத்தொடர் உணர்த்தும் பண்பு
அ) நேர்மறைப் பண்பு ஆ) எதிர்மறைப்பண்பு இ) முரண் பண்பு ஈ) இவை அனைத்தும்
6. 'உவா' என்ற சொல்லின் பொருள்
அ) முழுநிலவு ஆ) சந்திரன் இ) அமாவாசை ஈ) குளிர்கடல்
7. தமிழில் திணைப்பாகுபாடு எதன் அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது?
அ) சொற்குறிப்பு ஆ) பொருட்குறிப்பு இ) தொடர்குறிப்பு ஈ) எழுத்துக்குறிப்பு
8. பொருத்துக.
அ) தமிழ் அழகியல் - 1) பரலி சு.நெல்லையப்பர்
ஆ) நிலவுப்பூ - 2) தி.சு.நடராசன்
இ) கிடை - 3) சிற்பி. பாலசுப்பிரமணியம்
ஈ) உய்யும் வழி - 4) கி.ராஜநாராயணன்
அ) 4, 3, 2, 1 ஆ) 1, 4, 2, 3 இ) 2, 4, 1, 3 ஈ) 2, 3, 4, 1
9. நெடுநல்வாடையின் பாட்டுடைத் தலைவன்
அ) பாண்டியன் நெடுஞ்செழியன் ஆ) அதியமான்
இ) அறிவுடைநம்பி ஈ) இளம்பெருவழுதி
10. திருவருட்பாவின் ஆசிரியர் யார்?
அ) ஜி.யு.போப் ஆ) அப்பர் இ) சுந்தரர் ஈ) இராமலிங்க அடிகள்
11. இருமுறை சாகித்திய அகாதெமி விருது பெற்ற நூல் எது?
அ) ஒரு கிராமத்து நதி ஆ) உய்யும் வழி இ) தேன்மழை ஈ) சாய்வு நாற்காலி
12. திருவள்ளுவர் பல்கலைக்கழகம் எங்கு அமைந்துள்ளது?
அ) கடலூர் ஆ) வேலூர் இ) பெரம்பலூர் ஈ) திருப்பூர்
13. 'கடகம்' என்ற சொல் எதனைக் குறிக்கும்?
அ) விதைப்பெட்டி ஆ) ஓலைப்பெட்டி இ) வெத்தலைப்பெட்டி ஈ) சுருள்பெட்டி
14. காளைகளில் பல இனங்களைக் காட்டும் சொற்கள் நிரம்பிய நூல் எது?
அ) பாலைக்கலி ஆ) முல்லைக்கலி இ) பரிபாடல் ஈ) கலித்தொகை

பகுதி - II

பிரிவு - 1

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3 x 2 = 6

15. முயல்வாருள் எல்லாம் தலை என வள்ளுவர் யாரைச் சுட்டுகிறார்?
16. கலிவிழா, ஒலிவிழா - விளக்கம் தருக.
17. நிலையாமை குறித்துச் சவரி உரைக்கும் கருத்து யாது?

www.Padasalai.Net www.TrbTnpsc.com



18. திருவளர்ச் செல்வன், திருவளர் செல்வன் – இவற்றில் சரியான தொடர் எது? அதற்கான இலக்கண விதி யாது?

பிரிவு – 2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2 x 2 = 4

19. கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் குறித்து எழுதுக.
20. நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.
21. பசுமைக்குடில் வாயுக்கள் எவை?

பிரிவு – 3

எவையேனும் ஏழனுக்கு மட்டும் விடையளி. 7 x 2 = 14

22. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.
எத்தனை முறை நீ மற்றவர்கள் முன்னேறி செல்வதனை கண்டு ஒன்றும் செய்வதறியாது நம்பிக்கையின்றி துன்புறுவாய்.
23. மூன்றாவது சீர் அமைத்து எழுதுக.
அ) நல்லவை செய்யின் ..........
ஆ) அவமதிப்பும் ஆன்ற..........
24. கலைச்சொல்லாக்கம் தருக.
அ) conviction ஆ) conveyer belt
25. கீழ்க்காணும் சொல்லுருபுகளைப் பிரித்தும், சேர்த்தும் இரு வேறுதொடர்களை அமைக்க.
அ) கண் ஆ) படி
26. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.
அ) பூம்பாவாய் ஆ) தனியாழி
27. ஏதேனும் ஒன்றனுக்கு உறுப்பிலக்கணம் தருக.
அ) வியந்து ஆ) தந்தனன்
28. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.
அண்ணைக்கு அவனுக்குப் பணம் குடுத்து ஒதவியிருக்க வேண்டியதான.
29. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.
தின்மை, திண்மை
30. உவமைத் தொடர்களைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக.
அ) நகமும் சதையும் போல (அல்லது) ஆ) தாமரையிலை நீர் போல

பகுதி – III

பிரிவு – 1

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2 x 4 = 8

31. வாடைக்காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?
32. குகனோடு ஐவராகி, வீடணனோடு எழுவரான நிகழ்வுகளைச் சுட்டிக் காட்டுக.
33. திருஞானசம்பந்தர் பாடிய தேவாரம் குறித்து எழுதுக.
34. புறநானூறு குறித்தும் ஔவையார் குறித்தும் நீவிர் அறிவன யாவை?

பிரிவு – 2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2 x 4 = 8

35. பண்டையக் காலத்து எழுத்தாணிகள் பற்றி எழுதுக.
36. 'அறிவின் நகரம் சென்னை' – என்பதற்கான சான்றுகளைத் தருக.
37. மழைவெள்ளப் பாதிப்பிலிருந்து காத்துக் கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.
38. பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றைய கூட்டுக் குடும்பம் – எவ்வாறு?

பிரிவு – 3

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3 x 4 = 12

39. பொருள் வேற்றுமை அணியைச் சான்றுடன் விளக்குக. (அல்லது)
'சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும்' – இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



40. இலக்கிய நயம் பாராட்டுக. (மையக்கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக)

உண்ணும் உணவுக்கு ஏங்காமல்
உடுக்கும் ஆடைக்கு அலையாமல்
பண்ணும் தொழில்கள் பலகாண்போம்
பஞ்சப் பேயைத் துரத்திடுவோம்
அண்ணல் காந்தி வழிபற்றி
அகிலம் புகழ வாழ்ந்திடுவோம்
எண்ணும் அன்பர் உளம் தாங்கும்
இறைவா! துணைசெய் தருள்வாயே – கவிமணி

41. பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.

அ) எறும்பு ஊரக் கல்லும் தேயும் (அல்லது) ஆ) சிறுதுளி பெருவெள்ளம்

42. தமிழாக்கம் தருக.

i) Knowledge of languages is the doorway to wisdom.
ii) The limits of my language are the limits of my world.
iii) A good beginning makes a good ending.
iv) As you saw, so you reap.

43. அ) வெண்பாவிற்கான இலக்கணம் யாது?

ஆ) வாகைத்திணை, கூதிர்ப்பாசறையைச் சான்றுடன் விளக்குக.

## பகுதி – IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 3 x 6 = 18

44. அ) தமிழின் சீரிளமைத் திறம் வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக. (அல்லது)

ஆ) செய்ந்நன்றியறிதலே அறம் என்பதை வாயுறை வாழ்த்தின் துணை கொண்டு நிறுவுக.

45. அ) குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது –எவ்வாறு? விளக்குக. (அல்லது)

ஆ) பண்டைக்காலக் கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே நிகழ்ந்த கற்றல், கற்பித்தல் முறைகளைத் தொகுத்தெழுதுக.

46. அ) சாலை விபத்தில்லா தமிழ்நாடு – இக்கூற்று நனவாக நாம் செய்ய வேண்டியன யாவை?

(அல்லது)

ஆ) 'கிராமங்கள் தங்கள் முகவரியை இழந்து வருகின்றன' இக்கருத்தை விவரிக்க.

## பகுதி – V

4 + 2 = 6

47. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக:

அ) 'ஒருமையுடன்' .... எனத் தொடங்கும் தெய்வமணிமாலை.

ஆ) 'பொருள்' என முடியும் குறள்.

-----------

AMEER TUITION CENTRE
KAYALPATTANAM
Ph: 9488005009.

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com